**செ. கு. எண்:99** **நாள்:20.04.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 20.4.2013

தருமபுரி மாவட்டம், ‘Q’ பிரிவு குற்ற புலனாய்வுத் துறையில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.பஷீர் அவர்கள் 9.4.2013 அன்று அரூர் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், பெரவள்ளூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.மாசானம் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 10.4.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை ஆய்வாளர் மாசானம் மற்றும் தலைமைக் காவலர் பஷீர் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் நலக்குறைவால் காலமான காவல் துறை ஆய்வாளர் மாசானம் மற்றும் சாலை விபத்தில் உயிரிழந்த தலைமைக் காவலர் பஷீர் ஆகியோர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.**